பொத்துவில் பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொத்துவில் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொத்துவில் பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய எரிபொருள் கொடுப்பனவுகள் ரூபா 177,311 நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை.	நிதிக்கூற்று திருத்தியமைக்கபட்டு சீர் செய்யப்படும் என்பதையும் மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறு ஏற்படா வண்ணம் கவனம் எடுத்துக் கொள்ளப்படும்.	சீராக்கம் மேற்கொள்ளப் பட்டு சரியான நீதி வெளிக்காட்டப்பட வேண்டும்.
(ஆ)	2022 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் நன்கொடையாக 601 புத்தகங்கள் ரூபா 212,734 மற்றும் கணணி வகைகள் , புத்தக இறாக்கைகள் நிதிக்கூற்றில் சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை.	நிதிக்கூற்று திருத்தியமைக்கப்பட்டு சீர் செய்யப்படும் என்பதையும் மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறு ஏற்படா வண்ணம் கவனம் எடுத்துக் கொள்ளப்படும்	சீராக்கம் மேற்கொள்ளப் பட்டு சரியான நீதி வெளிக்காட்டப்பட வேண்டும்
(இ)	சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் 264 காணி மற்றும் கட்டிடங்கள் 1992 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப் பெறுமதி நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.	நிதிக்கூற்று திருத்தியமைக்கப்பட்டு சீர் செய்யப்படும் என்பதையும் மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறு ஏற்படா வண்ணம் கவனம் எடுத்துக் கொள்ளப்படும்	காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அதன் உண்மைப் பெறுமதி நிதிக்கூற்றில் வெளிக்காட்டப்பட வேண்டும்.

(ஈ)	சபைக்குச் சொந்தமான வாகனங்களின் பெறுமதிகள் மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப் பெறுமதி நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.	நிதிக்கூற்று திருத்தியமைக்கப்பட்டு சீர் செய்யப்படும் என்பதையும் மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறு ஏற்படா வண்ணம் கவனம் எடுத்துக் கொள்ளப்படும்	வாகனங்களின் பெறுமதிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அதன் உண்மைப் பெறுமதி நிதிக்கூற்றில் வெளிக்காட்டப்பட வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	**இணக்கமின்மை**	**சபையின் கருத்துரை**	**சிபார்சு**
1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டங்கள் 134	அதிகார எல்லையினுள் அமைந்துள்ள வீதவரி மற்றும் உரிமங்களை இனங்கண்டு வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் ஆதனங்கள் மீதான ஆதனவரியினை அறவீடு செய்வதற்காக சபையின் அபிவிருத்திப் பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய அபிவிருத்திப் பிரதேசங்களிற்கு ஆதன வரியினை எதிர்காலத்தில் விதித்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன	அறவிட வேண்டிய வீதவரி மூலகங்களை இணங்கண்டு வரிவருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்			
(i) இலக்கம் 5(xii) விதி	காசு மற்றும் காசோலைகளில் கையொப்பமிடுவோர், வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர் மற்றும் களஞ்சிய பொருள் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து போதுமான	எதிர்காலத்தில் தொகைகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.	பிணைப்பணம் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		பிணைப்பணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ii)	இலக்கம் 218 விதி	சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை ஒவ்வொரு வருடமும் ஒரு முறையேனும் பரீட்சிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பொத்துவில் பிரதேசசபை அதிகாரப் பிரதேசத்தினுள் ஆதனவரி அறவீட்டுக்கான ஆரம்ப பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதன் பிரகாரம் ஆதனவரி அறவீட்டுக்காக ஆதனங்களின் பெறுமதிகள் மதிப்பீடுகள் செய்யப்படும்	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 31,686,069 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 10,495,411 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	850,000	850,000	30,686	819,314	3,500,000	3,500,000	130,000	3,370,000
(ii)	வாடகை	15,220,000	38,563,070	12,413,900	26,149,170	19,750,000	34,284,358	10,941,288	23,343,070
(iii)	உத்தரவுப்பத்திரக் கட்டணம்	4,910,000	4,910,000	2,318,750	2,591,250	5,010,000	5,010,000	4,062,720	947,280
(iv)	ஏனைய வருமானம்	31,020,000	31,020,000	37,483,408	(6,463,408)	9,205,000	9,205,000	4,793,278	4,411,721
	கூட்டுத் தொகை	52,000,000	75,343,070	52,246,744	23,096,326	37,465,000	51,999,358	19,927,286	32,072,071

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய சந்தை கடையறை வாடகை ரூபா 6,578,220 தொகையில் 11 வாடகைதாரர்களிடமிருந்து 10 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரையும் ரூபா 171,520 தொகையும், 2 ஆண்டுகள் வரையான நிலுவை ரூபா 2,479,000 தொகையும், மீளாய்வாண்டில் ரூபா 2,392,000 தொகையும் காணப்பட்டிருந்தது.	நிலுவைகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிலுவைகள் அறவீடு செய்யப்படு கின்றன.	அறவிட வேண்டிய நிலுவைகள் உடனடியாக அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய சந்தை கடையறை வாடகை ரூபா 9,491,838 இல் 25 ஆண்டுகள் மேற்பட்ட நிலுவையாக ரூபா 4,637,377 உம், 2 ஆண்டுகள் வரையான நிலுவை ரூபா 4,643,710 உம், அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வாடகைகள் தொடர்பில் திருத்தமான பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு அதன் பிரகாரம் ஆண்டு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.	அறவிட வேண்டிய கடையறை வாடகை நிலுவைகளை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமான கடையறைகளுக்கு அறவிடப்படும் வாடகைத் தொகையினை தற்கால சந்தைப் பெறுமதிக்கேற்ப காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்து வாடகையினை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் வாடகை பெற்றவர்களுடன் புதிதாக உடன்படிக்கை ஒன்றினை மேற்கொள்ளவும், வாடகைப் பெறுமதியில் திருத்தங்களை மேற்கொள்வும் தீர்மானிக்கப்பட்டடுள்ளது.	உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
(ஈ)	சபையினால் வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் மூலம் உச்ச வருமானம் பெற்றுக்கொள்ள கூடிய வகையில் வியாபார நிறுவனங்களின் எண்ணிக்கையினை களப்பரிசீலணை மேற்கொண்டு சரியான வியாபார நிலையங்களின் தகவல்கள் திரட்டப்பட்டு பதிவேடுகளை முழுமையாக பேணுவதற்கும் வருமானங்களினை கணிப்பீடு செய்யவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சபையின் வருடாந்த வருமானம் ஈட்டக் கூடிய வியாபார நிறுவனங்களின் எண்ணிக்கை 2018, 2019, 2020, 2021. 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகள் முறையே 1,020, 802, 830, 864, 741 மற்றும் 443 என நெகிழ்வுத் தன்மை போக்கினை கொண்டிருந்ததுடன், சபையின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த வருமான மதிப்பீட்டுத்தொகை, அறவிடப்பட்ட தொகைகள் மற்றும் அறவிடவேண்டிய தொகை என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் காணப்பட்டிருந்தன.	வியாபார நிறுவனங்களுக்கு அவற்றின் சுகாதார மற்றும் ஏற்புடைய விடயங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே வியாபார அனுமதிப்பத்திரம் வினியோகம் செய்யப்படுகின்றது	உரிய முறைப்படி வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	238 வியாபார நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இவ்வாறான தவறு ஏற்படா வண்ணம் கவனம் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின் றேன்.	உரிய கடைப் பரிசோதனை செய்து அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்
(ஊ)	1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம், ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் காணி கொடுக்கல் வாங்கல் மீதான முத்திரைக் கட்டணங்கள் மீளளிப்பு கோரல் தொடர்பில் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதும், சபையினால் காணிப் பதிவாளரிடமிருந்து மீளாய்வாண்டுக்கான முத்திரைக் கட்டணங்கள் உரிய காலப்பகுதிகளில் கோரிப் பெற்றுக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் இவை பரிசீலனை செய்து உடன் மீள அனுப்பிவைக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.	உடனடியாக நடைமுறைப்படுத்தபட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
திண்மக்கழிவகற்றலுக்கான கொடுப்பனவானது 88 மணித்தியாலங்களுக்கு ரூபா 836,500 மேற்கொள்ளப்பட்டிருந்தும், இக் கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்பட்ட இயந்திரத்தின் மணித்தியாலத்தினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது மேலும் சபையில் JCB இயந்திரமொன்று காணப்பட்டிருந்தும் அவ்வியந்திரம் 2021 திசெம்பர் 08 ஆந் திகதியிலிருந்து பழுதடைந்து காணப்பட்டிருந்த போதிலும், சபையினால் அவ் இயந்திரத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் சபைக்கு உழைக்கப்படும் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.	JCB இயந்திரத்திற்கான சேவைகளினை பெறும் போது இயந்திர நேரங்களின் எண்ணிக்கையினை உறுதி செய்து பணம் செலுத்த வேண்டும். மேலும் சபையின் இயந்திரத்தினை உடனடியாக பழுதுபார்த்து சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து நீரிணைப்பினைப்	இது தொடர்பாக நீரிணைப்பினை பெறும்	உரிய முறைப்படி உரிய காலத்திற்குள்

	பெற்றுக்கொள்வதற்காக வெட்டப்பட்ட 34 வீதிகள் திருத்தம் மேற்கொள்ளாததன் காரணமாக பள்ளங்குழிகளாக அவ்வீதிகள் சேதங்களுக்கு உட்பட்டு எதிர்காலத்தில் முழுமையாக மீள்சீரமைக்கவேண்டிய நிலை ஏற்படும்.	பயனாளிகளிடமிருந்து வைப்புத் தொகை அறவிடுவதற்கு அல்லது வீதிகளை புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்	நடைமுறைப்படுத்த ப்பட வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான தண்ணீர் வவுசர் மற்றும் களிவவுசர் ஆகியவற்றினை வாடகைக்கு வழங்குதல் மற்றும் சபையின் அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய முறையான பதிவேடுகள் சபையினால் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இவை தொடர்பாக முறையான பதிவேடுகளில் பதிவு செய்து தண்ணீர் வவுசர் மற்றும் களிவவுசர் ஆகியவற்றினை வாடகைக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்	உடனடியாக பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்படுவதுட ன் சபையின் வருமானத்தினை அதிகரித்துக் கொள்ளல் வேண்டும்.
(இ)	நிறுவனங்களின் விளம்பர பதாதைகள், பதாதைகளின் எண்ணிக்கை, அவற்றின் அளவுகள், போன்றவற்றை உள்ளடக்கிய பதிவேடுகள் பராமரிக்க சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இவை தொடர்பாக முறையான பதிவேடுகள் உருவாக்கப்பட்டு வியாபர நிலையங்களின் விளம்பதாதைகள் தொடர்பான தகவல்கள் பதிவு செய்யப்படுவதுடன், துணைவிதிகள் உருவாக்கப்பட்டு சபையின் வருமானத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்	பதிவேடுகள் பயன்படுத்தப்படுவதுட ன் துணை விதிகள் இயற்றப்பட்டு / உரிய அனுமதிகள் பெறப்பட்டு சபையின் வருமானத்தை உயர்த்த வேண்டும்
(ஈ)	பொதுச் சந்தையில் காணப்படும் 33 கடையறைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பத்திரத்தில் வாடகைதாரர்களின் எந்தவிதமான கையொப்பங்களுமின்றி காணப்பட்டிருந்ததுடன், அவ் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், 17 வாடகைதாரர்களிடமிருந்து கடந்த வருட நிலுவையில் எவ்வித அறவீடுகளும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அறவிடவேண்டிய ரூபா 1608,000 நிலுவை வாடகையினை சட்ட நடவடிக்கை மூலம் அறவிடுவதற்கு சபையினால் முடியாமலுள்ளன.	எதிர்காலத்தில் இவை தொடர்பாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.	ஒப்பந்த பத்திரத்தில் முறையான ஒப்பம் இட மற்றும் அறவிட வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	எட்டு வருடங்களுக்கு மேலாக விளைவற்றுக் காணப்படும் ரூபா 925,064 கூட்டுப் பெறுமதிகளினைக் கொண்ட 03 வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகளினை வருமானம் உழைக்கும் மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேலதிக நிதியினை உரிய அனுமதியுடன் வருமானம் உழைக்கும் மூலகங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

			வேண்டும்.
(ஊ)	சர்வதேச தொண்டு நிறுவனமொன்றினால் 2013 ஆம் ஆண்டில் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த டபிள் கெப் வாகனத்தின் உரிமை சபையின் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	வாகனத்தின் உரிமையினை மாற்றி பெற்றுக் கொள்வதோடு உரிய காலத்திற்கு தேவையான வாகன வருமான உத்தரவுப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
திண்மக்கழிவகற்றல் கட்டண அறவீடு மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடங்களில் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், ஹோட்டல்கள் மற்றும் ஏனைய வியாபார நிலையங்களில் அறவிடப்படும் திண்மக்கழிவகற்றல் கட்டணங்களுக்கு முறையான பதிவேடுகள் பேண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மோசடிகள் இடம்பெற சாத்தியங்கள் அதிகமாக காணப்படுகின்றது.	எதிர்காலத்தில் இவை தொடர்பாக முறையான பதிவேடுகள் உருவாக்கப்பட்டு செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.	திண்மக்கழிவகற்றல் சேகரிக்கப்படும் வியாபார நிலையங்கள், வீடுகள் மற்றும் ஏனையவை தொடர்பான விபரமான பதிவேட்டு முறைமையினை பேணி நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடு பொது 22 இல் பதியப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.	அனைத்து நிலையான சொத்துக்களையும் பொது 22 இல் கிரயம் மற்றும் மீள் மதிப்பீட்டு பெறுமதிகளுடன் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்கான பொருட் கணக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்னர் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான பிரதேச சபை அலுவலகம், பொது நூலகங்களும் வாசிப்பு நிலையங்களும் மற்றும் நில நிரப்புத் தளமும் விலங்கறு மனையும் போன்றவற்றின் பொருட் கணக்கெடுப்பு தொடர்பில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பொருட் கணிப்பீட்டு சபையினால் வழங்கப்பட்ட சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கு சபையினால் கணக்காய்வுத் திகதி வரை	எதிர்காலத்தில் இது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.	சபைக்கு சொந்தமான எல்லாப் பொருட்களும் கணக்கெடுப்பின் போது உள்ளடக்கப்படல் வேண்டும். மேலும், கணிப்பீட்டு சபையினால் வழங்கப்பட்ட சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவத

	நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2023 ஆம் ஆண்டில் ரூபா 14,693,782 க்கு கொள்வனவு செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கான பொருட்கள், குறித்த உற்பத்தி நிலையம் 2025 ஏப்ரல் 07 ஆந் திகதி வரை நிறுவப்படாமையினால், கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் பாதுகாப்பற்ற இடமொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. இதன் மூலம் செயற்திட்டத்தின் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.	குறித்த தேங்காய் எண்ணெய் நிலையத்திற்கு காவலாளி நியமிக்கப்பட்டு அங்குள்ள சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. யானை வேலி அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றது	உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
மீளாய்வாண்டில் சபையின் எல்லைக்குட்பட்ட சர்வோதய புரத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பிரதான திண்மக்கழிவகற்றல் நிலையமானது ரூபா 9,119,642 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், நேரடிக் களவிஜயத்தின் போது யானைப் பாதுகாப்பு வேலி உரிய முறையில் அமைக்கப்பட்டிருக்காததனால் குறித்த கட்டிடத்தினை யானைகள் சேதப்படுத்துவதற்குரிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.	யானை வேலி அமைப்பதற்கும் அதன் பின்னர் இந் நிலத்தில் சேதனப் பசளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் சேதமுற்ற குழாய்களை திருத்தம் செய்த பின்னர் பிடிகாசு விடுவிப்பதற்கும் அனுமதிக்கப்படும்.	யானை வேலி அமைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 வாகனங்களின் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
மீளாய்வாண்டிற்கான கணக்காய்வின் போது சபைக்குச் சொந்தமான 15 வாகனங்களுக்கு 2009 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு வாகன வருமான உத்தரவுப் பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	குறித்த வாகனங்களுக் கான காப்புறுதி பத்திரங்கள் பெறப்பட்டுள்ளது எதிர்காலத்தில் வாகன வருமான உத்தரவுப்பத்திரம் எடுப்பது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.	வாகன வருமான உத்திரவுப் பத்திரம் மற்றும் காப்புறுதி பத்திரம் பெற்றுக் கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.7 கைவிடப்பட்ட செயற்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
சாத்திய வள ஆய்வினை மேற்கொள்ளாமல் அல் ஹுதா சிறுவர் விளையாட்டு பூங்கா அமைப்பதற்காக உள்ளுர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் நிதியேற்பாட்டில் ரூபா 1,997,500 க்கு கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்களை மழை, வெயில் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால், அதன் வாழ்வுத்தன்மை குறைவடைந்து செல்வதுடன், விளையாட்டு உபகரணங்கள் உடைந்தும் மற்றும் பாதுகாப்பின்றியும் காணப்பட்டிருந்தன. அத்துடன், இச் சிறுவர் விளையாட்டு பூங்கா அமையப்பெற்றுள்ள ஆற்றங்கரையானது முதலைகளின் நடமாட்டம் நிரம்பி காணப்படுவதுடன் பொது மக்களுக்கு பாதுகாப்பான இடமாக காணப்படாததன் காரணமாக திட்டத்தின் நோக்கம் அடையப்பெறவில்லை.	இப் பூங்கா அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டறிக்கையில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பூங்காவின் விளையாட்டு உபகரணங்களைபாதுகாப்பதற்காக கூடாரம் மற்றும் இதர பாதுகாப்பு ஏற்பாடுகளை LDSP திட்டத்தின் ஊடாக மேற்கொள்வதற் கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்ப டாத காரணத்தினாலும், பாதுகாப்பின்மை காரணமாக பொருத்த முடியாதிருந்தது. எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய முறைப்படி உரிய காலத்திற்குள் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் மூலம் நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்காக பரிந்துரைகளை தயாரித்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்த மற்றும் செயவாற்றலை உயர்த்துவதற்கு பரிந்துரைகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.2 சுற்றாடல் பிரச்சினை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க	சுற்றாடல் சார் அனுமதிப் பத்திரங்கள் பெறப்படவேண்டிய நிறுவனங்கள்	சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்

தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமானங்களுக்கு இணங்க, 23 தொழில் நிறுவனங்களின் காலாவதியான அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு/ செல்லுபடியற்றதாக்குவதற்கு/ நிராகரித்தலுக்கு/ இடைநிறுத்துவதற்கு சபையினால் நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் திண்மக்கழிவு சேகரிப்பு நிலைய இடம், விலங்கறுமனை போன்றவற்றிற்கு மீளாய்வாண்டு வரை சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு அவற்றினைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளளப்படும்	கொள்ளக்கூடிய தொழில் நிறுவனங்களை அடையாளம் கண்டு பதிவேடுகளை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**சிபாரிசு**
அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணவும், அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சபையின் இலக்குகளது குறிகாட்டிகள் உருவாக்கப்பட்டு பாதீட்டில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்	சுற்றறிக்கையின் பிரகாரம் குறிக்கோள்க ளை அடையக்கூடிய வகையில் குறிகாட்டிகளை உருவாக்கி பாதீட்டில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.